

ஆவடி தொகுதியில் போட்டியிடும் கழக வேட்பாளர் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் திருவேற்காடுநகரம் முழுவதும் உதயசூரியன் சின்னத்திற்கு கழக ஆட்சியின் சாதனைகளை பொதுமக்களிடம் எடுத்து கூறி தீவிரவாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார். அருகில் திருவள்ளூர் நாடாளுமன்ற உறுப்பினர் சசிகாந்த் செந்தில், நகரக் கழகச் செயலாளர் என். இ. கே.மூர்த்தி உள்பட மாநில மாவட்ட திருவேற்காடு நகரக் கழக வட்ட கழக கவுன்சிலர்கள் நிர்வாகிகள் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சி சார்ந்த தோழர்கள் அனைவரும் பெருந்திரளாக கலந்து கொண்டனர்.



சென்னை வடகிழக்கு மாவட்டம் மாதவரம் தொகுதிக்குட்பட்ட புழல் ஒன்றியத்தில் உட்பட்ட புள்ளிலைன், தீர்த்தகரியம்பட்ட, வடகரை, அழிச்சிவக்கம், கிராண்டுலைன், விளங்காடுபாக்கம், சென்றம்பாக்கம் ஊராட்சியில் மாதவரம் எஸ்.சுதர்சனம் வாக்கு சேகரித்தார். இந்நிகழ்வில் புழல் ஒன்றிய செயலாளர் ,ச.அற்புதராஜ் ஊராட்சி மன்றத் தலைவர் உள்ளிட்ட திமுக தலைமையிலான மதசார்பற்ற கூட்டணியின் கழக நிர்வாகிகள் மற்றும் தோழர்கள் கலந்து கொண்டனர்.

### மா.பா.அன்புதுரை முன்னிலை! மு.செந்தில்குமார் தலைமை!

# 113 (அ) வட்டத்தில் எழிலன் நாகநாதனை ஆதரித்து பிரச்சாரம்!

## வட்ட கழக செயலாளர் த.தேவராஜ் அறிக்கை!

சென்னை, ஏப்.13-

நடைபெற உள்ள 2026 ஆம் ஆண்டின் சட்டமன்ற தேர்தல் ஆயிரம் விளக்கு தொகுதியில் தி.மு.க. சார்பில் போட்டியிடும் வேட்பாளர் மருத்துவர் எழிலன் நாகநாதனை ஆதரித்து மா.பா.அன்புதுரை முன்னிலையில் 113 (அ) வட்ட கழக செயலாளர் த.தேவராஜ் வரவேற்பில் சென்னை மேற்கு மாவட்ட தொண்டர் அணி அமைப்பாளர் மு.செந்தில்குமார் தலைமையில் இன்று (13-04-2026, திங்கள்கிழமை) மாலை 4 மணியளவில் தரு மாபுரம் முத்துமாரியம்மன் ஆலயத்தில் இருந்து தரு மாபுரம் மெயின் ரோடு வழியாக 1வது தெரு முதல் 12வது தெரு வரை கார்ப்பரேஷன் லயன், சேலையப்பன் தெரு, சீரணிபுரம் பகுதி வரை தீவிர வாக்கு சேகரிப்பு நடைபெற உள்ளது.

எனவே 113 (அ) வட்ட கழக நிர்வாகிகள் மற்றும் அணிகளின் மாவட்ட, பகுதி, வட்ட அனைத்து நிர்வாகிகள் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### சென்னை கிழக்கு மாவட்டம், மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சிகளின் சார்பில்

# துறைமுகம், கொளத்தூர், அம்பத்தூர் தொகுதிகளில் நடைபெறும் வாக்குசேகரிப்பு மற்றும் பிரச்சாரங்கள் விவரம்!



## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் பி.கே.சேகர்பாபு அறிவிப்பு!

| நாள் 13.4.2026 திங்கள் | பொருள் | இடம் |
|---|---|---|
| காலை 7.00 மணி | துறைமுகம் சட்டமன்றத் தொகுதி கழகவேட்பாளர் திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் 57வது வட்டத்தில் வாக்கு சேகரிப்பு | ஜட்காபுரம், 57வது வட்டம், துறைமுகம் மேற்கு பகுதி |
| நண்பகல் 12.00 மணி | துறைமுகம் தொகுதிக்குட்பட்ட மகளிர் அணி மகளிர் தொண்டரணி மற்றும் மகளிர் நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் | 55 அ வட்ட பணிமனை, நாட்டு பிள்ளையார் கோயில் தெரு துறைமுகம் கிழக்கு பகுதி |
| நண்பகல் 12.30 மணி | துறைமுகம் தொகுதிக்குட்பட்ட இளைஞர் அணி மாணவர் அணி தகவல் தொழில்நுட்ப அணி விளையாட்டு அணி நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் | 55அ வட்ட பணிமனை நாட்டு பிள்ளையார் கோயில் தெரு துறைமுகம் கிழக்கு பகுதி |
| மாலை 5.00 மணி | துறைமுகம் சட்டமன்றத் தொகுதி கழகவேட்பாளர் திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் 59, 59அ வட்டத்தில் வாக்கு சேகரிப்பு | எல்லீஸ்ரோடு, 59அ வட்டம் துறைமுகம் மேற்கு பகுதி |
| மாலை 6.00 மணி | கொளத்தூர் சட்டமன்ற தொகுதி வேட்பாளர் கழகத்தலைவர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு, சி.பி.ஐ அகில இந்திய பொதுச்செயலாளர் D,ராஜா அவர்கள் வாக்கு சேகரிப்பு | தென்பழனி நகர் 65அ வட்டம் கொளத்தூர் மேற்கு பகுதி |
| மாலை 7.00 மணி | அம்பத்தூர் சட்டமன்ற தொகுதி கழக வேட்பாளர் அ.பு.பூர்ணிமா அவர்களுக்கு பாட்டாளி முன்னேற்ற கட்சி தலைவர் என்.ராமமூர்த்தி அவர்கள் வாக்குசேகரிப்பு | மேனாம்பேடு பேருந்துநிலையம் அருகில் அம்பத்தூர் கிழக்கு பகுதி |

மேற்கண்ட வாக்குசேகரிப்பு, பிரச்சாரகூட்டங்கள் மற்றும் ஆலோசனை கூட்டங்களில் அந்தந்த பகுதிக்குட்பட்ட கழக நிர்வாகிகள், தோழமைக்கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

**அமைச்சர் பி.கே.சேகர்பாபு**

செயலாளர், சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க.

### ‘இராயபுரத்தில் வெல்வோம் ஒன்றாக’

# இராயபுரம் சட்டமன்ற தொகுதி கிழக்கு பகுதியில் கழக வெற்றி வேட்பாளர் டாக்டர் அ.சுபேர் கான் வீடு வீடாக வாக்கு சேகரிப்பு!



## இராயபுரம் கிழக்கு பகுதி கழகச் செயலாளர் இரா.செந்தில்குமார் அறிவிப்பு!

சென்னை வடக்கு மாவட்டம், இராயபுரம் கிழக்கு பகுதி 49–அ மற்றும் 50–அ வட்டங்களில் பகுதிச் செயலாளர் இரா.செந்தில்குமார் தலைமையில் வட்டச் செயலாளர்கள் காட்டன் சதிஷ், என்.கிருஷ்ணன் ஆகியோர் முன்னிலையில் 13.4.2026 காலை 7 மணி முதல் இராயபுரம் சட்டமன்றத் தொகுதியில், மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் போட்டியிடும் தி.மு.க. வெற்றி வேட்பாளர் டாக்டர் அ.சுபேர் கான் எம்.எஸ்., (ஆர்த்தோ) அவர்கள் வீடு வீடாக, பொதுமக்களை சந்தித்து வாக்குகளை சேகரிக்கின்றார்.

இந்நிகழ்ச்சியை தொகுதி பார்வையாளர் திரு. கலாநிதி வீராசாமி எம்.பி., சட்டமன்ற உறுப்பினர் ஐட்ரீம்ஸ் மூர்த்தி, தலைமை செயற்குழு உறுப்பினர்கள் தா.இளைய அருணா, நா.மனோகரன் ஆகியோர் துவக்கி வைக்கின்றனர்.

மேலும், தோழமைக் கட்சிகளைச் சார்ந்த நிர்வாகிகள் மற்றும் கழக நிர்வாகிகள் பெருந்திரளாக கலந்து கொள்ளவிருக்கின்றனர் என பகுதிக் கழகச் செயலாளர் இரா.செந்தில்குமார் தெரிவித்துள்ளார்.

வேட்பாளர் வாக்கு சேகரிக்கும் தெருக்களின் பட்டியல் விவரம் பின்வருமாறு:–

### 49-அ மற்றும் 50-அ வட்டங்களில் வேட்பாளர் டாக்டர். சுபேர் கான் வாக்கு சேகரிக்கும் இடங்கள்:

| நாள்: 13.04.2026 – காலை 7.00 மணி | |
|---|---|
| 1. | ராஜவேலு தெரு செல்வராணி திருமண மண்டபம் அருகில், |
| 2. | புதுமனை குப்பம் (மசூதி 1வது தெரு & 3வது தெரு) |
| 3. | புது காமராஜ் நகர் 5வது தெரு, |
| 4. | புதுமனை குப்பம் 2வது தெரு |
| 5. | புது காமராஜ் நகர் 1 முதல் 4வது தெரு, |
| 6. | எஸ்.என்.தெரு |
| 7. | தாண்டவராயன் தெரு, (பழைய அமராஞ்சிபுரம் முழுவதும்) |
| 8. | முத்தமிழ் நகர், (பி.ஏ.என்.ஆர். சாலை வழியாக) |
| 9. | ராயல் கிரேஸ்ட் சாந்தி காலனி |
| 10. | பி.ஏ.என்.ஆர். சாலை 3வது சந்து ஐட்ரீம் நட்சத்திரா |
| 11. | பி.ஏ.என்.ஆர். சாலை 7வது சந்து & 6வது சந்து |
| 12. | கிரேஸ் கார்டன் 5வது சந்து & 1,2,3,4, சந்துகள் |
| 13. | மேற்கு கல்மண்டபம் ரோடு, ஆதம் தெரு |
| 14. | குமாரசாமி லேன் சிங்காரதோட்டம் 1 முதல் 8 சந்துகள் |
| 15. | சோமு செட்டி தெரு 1முதல் 5 சந்துகள், ஆதம் தெரு |
| 16. | வீராசாமி தெரு, சோமு செட்டி 6வது தெரு, பாஷ்யம் தெரு |
| 17. | போலிஸ் லேன், ராஜகோபால் தெரு, வேலாயுத பாண்டியன் தெரு |
| 18. | எம்.சி.ரோடு சுழல் மெத்தை அருகில் முடிவு. |

| நாள்: 13.04.2026 – மாலை 5.00 மணி | |
|---|---|
| 1. | தீயணைப்பு நிலையம் |
| 2. | கார்ப்பரேஷன் 2வது சந்து |
| 3. | குடிசை மாற்று வாரிய குடியிருப்பு |
| 4. | கிழக்கு மாதா கோயில் 1 முதல் 10 வரை சந்து |
| 5. | முனியப்பன் சந்து |
| 6. | அம்மன் கோயில் தெரு |
| 7. | அம்மன் கோயில் 1வது சந்து |
| 8. | வடக்கு மாதா கோயில் தெரு |
| 9. | வடக்கு மாதா கோயில் ஸ்கொயர் லேன் |
| 10. | வெங்கடேசன் தெரு |
| 11. | மேற்கு மாதா கோயில் தெரு |
| 12. | ஆண்டியப்பன் தெரு |
| 13. | பி.வி.கோயில் தெரு |
| 14. | வெங்கடாசலம் தெரு |
| 15. | மன்னார்சாமி கோயில் தெரு (பாண்டியன் ஸ்வீட் வாசுதேவ பவன் ஹோட்டல் அருகில் முடிவு) |

### வேட்பாளர் மயிலை த.வேலுவை ஆதரித்து

# 123 ‘அ’ வட்டத்தில் வாக்குச் சேகரிப்பு!

## வட்டச் செயலாளர் மூ.ராஜேந்திரன் அறிக்கை!

சென்னை, ஏப். 13-

சென்னை தென்மேற்கு மாவட்டம் வெற்றி வேட்பாளர் மயிலை த. வேலுவை ஆதரித்து தீவிர வாக்கு சேகரிப்பு இன்று (13.4.2026) திங்கள் கிழமை 123 அ வட்டத்தில் பிரச்சாரம் செய்யும் இடம் காலை 7 மணியளவில் படவட்டான் தெரு குருபுரம், நைனான் தெரு குருபுரம் 1வது மெயின் ரோடு, கால்வாய்கரை சாலை, விசாலாட்சி தோட்டம், சுப்புராயன் சாலை, குடிசை மாற்று வாரியம் விசாலாட்சி தோட்டம், பல்லக்கு மாநகர், கபாலி தோட்டம், கனால் பேங்க் சாலை, ஸ்தூபி வரை.

மாலை 4 மணி அளவில் இளைப்பாற்றி மாதா ஆலயம், சுப்புராயன் சாலை, சுந்தர்ராஜன் தெரு, சி பி ராமசாமி சாலை, அபிராமபுரம் 4வது தெரு, வாரன் சாலை, அபிராமபுரம் 3வது தெரு, மதனகோபால் தெரு, கன்னிக்கோயில் மேடு, கன்னிக்கோயில் பள்ளம், பாஸ்கராபுரம், லஸ் பாலையா அவென்யு, கென்னடி தெரு, கற்பகாம்பாள் தெரு 1வது, 2வது, 3வது தெருக்கள், லஸ் ஆவின், அபிராமபுரம் ஸ்தூபி ஆகிய இடங்களில் பிரச்சாரம் நடைபெறுகிறது.

எனவே மாவட்ட கழக நிர்வாகிகள் பகுதி நிர்வாகிகள் வட்டக் கழக நிர்வாகிகள் அணியின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் பி.எல்.ஏ. டு. பி.எல்.சி. அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு 123 அ வட்ட கழக செயலாளர் மூ. ராஜேந்திரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.



திருவள்ளூர் அடுத்த வெங்கத்தூர் ஊராட்சி மணவாளநகர், கே.கே.நகர், குப்புசாமி நகர், சண்முக பத்மாவதி நகர், ஒண்டிக்குப்பம், பட்டரை ஆகிய பகுதியில் திருவள்ளூர் சட்டமன்றத் தொகுதி கழக வேட்பாளர் வி.ஜி.ராஜேந்திரன் மாவட்ட அவைத்தலைவர் கே.திராவிடபக்தன் தலைமையில் ஒன்றிய செயலாளர் கே.அரிகிருஷ்ணன், மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் கே.ஏ.மதியழகன், மாவட்ட வர்த்தக அணி துணை அமைப்பாளர் பி.ஆர்.பிரபாகரன், முன்னிலையில் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார். உடன் மாநில மாவட்ட நிர்வாகிகள் ஆர்டிஇ. ஆதிசேஷன், பி.கே.நாகராஜ், கே.செங்குட்டுவன், சி.ஆர்.குமரன், கொப்பூர் திலீப்குமார், ஆர்.மோகனசுந்தரம் ந புட்லூர் ராஜேந்திரகுமார், தாடி நந்தகுமார், மண்புகழ் மனோகரன், ஜெயபிரகாஷ், அண்ணாமலை, சீனிவாசன், மீசை ராமதாஸ், கார்த்திக், பா.சதீஷ்பாஸ்கர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



திரு.வி.க நகர் சட்டமன்றத் தொகுதியின் திராவிட முன்னேற்றக் கழக வெற்றி வேட்பாளர் வழக்கறிஞர் கே.எஸ்.இரவிச்சந்திரனை ஆதரித்து, திரு.வி.க நகர் தொகுதிக்குட்பட்ட வட்டம் 71 அ–வில் உள்ள நார்த் டவுன் பகுதிகளில் தீவிர வாக்கு சேகரிப்பு நடைபெற்றது. திரு.வி.க நகர் சட்டமன்றத் தொகுதி தேர்தல் பொறுப்பாளரும் சென்னை மாநகராட்சி மேயருமான பிரியா ராஜன், தாயகம் கவி எம்.எல்.ஏ மற்றும் பகுதி கழக செயலாளர் செ. தமிழ் வேந்தன், வட்ட கழக செயலாளர் ம. ருத்திரமூர்த்தி ஆகியோர் முன்னிலையில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சித் தோழர்கள், கழக நிர்வாகிகள் உள்ளிட்டோர் பெருந்திரளாகக் கலந்துகொண்டனர்.